**CC**.**No**.9/2025

**Date**: 11.05.2026

**எ.சா. 1. உமா மகேஸ்வரி, 40/2026, த/பெ. பழனியப்பன், கோட்டையூர்.**
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) எனக்கும் எதிரிக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால் சரிதான். ரூ.18 லட்சத்திற்கு மேற்பட்ட தொகையை நான் எதிரியிடம் இருந்து வங்கி மூலமாகவும், ரொக்கமாகவும் பெற்றேன் என்றால் அவ்வளவு தொகை பெற்றதில்லை. நான்தான் கடனாக எதிரிக்கு பணம் கொடுத்துள்ளேன். நான் எதற்காக எதிரியிடம் இருந்து பணம் பெற்றுள்ளேன் என்றால் நான் கொடுத்த ரூ.12 லட்சத்திற்காக மாதம் தோறும் ரூ. 11 ஆயிரம் வட்டிக்காக வங்கி மூலமாக எனக்க கொடுத்துள்ளார். வட்டி தொகை எவ்வளவு என்றால் ரூ.11,000/- ஆகும். சதவீதம் எவ்வளவு என்றால் வங்கி வட்டி சதவீதம் எனக்கூறி ரூ.11,000/- பெற்றேன். தற்போதைய தொடர்பான பணம் கொடுக்கல் வாங்கல் எனது கல்லூரி காலத்தில் உடையது என்றால் நான் சட்டம் படிக்கும்போதுதான் பரிவர்த்தனை தொடங்கப்பட்டது. பணம் கொடுக்கல் வாங்கலுக்காக எதிரியை எந்த எண்ணின் மூலம் தொடர்பு கொண்டேன் என்றால் 9677336192.

2) வேறு எண்கள் மூலம் தொடர்பு கொண்டுள்ளேனா என்றால் தொடர்பு கொண்டுள்ளேன். 7904798108 மூலம் எதிரியை தொடர்பு கொண்டுள்ளேனா என்றால் தொடர்பு கொண்டுள்ளேன் அது எனது எண்ணாகும். 759874344 மூலம் எதிரியை தொடர்பு கொண்டுள்ளேனா என்றால் எனது மகளின் எண்ணாகும், 1 அல்லது 2 முறை பேசியுள்ளேன். மேற்கூறிய 3 எண்கள் தவிர வேறு எண்கள் மூலமாக எதிரியை தொடர்பு கொண்டுள்ளேனா என்றால் வேறு எண்கள் மூலமாக தொடர்பு கொண்டு இருக்கலாம் தற்போது நினைவில்லை. பெங்கலூரில் இருக்கும்போது மேற்கூறிய 3 எண்கள் மூலமாக மட்டும்தான் எதிரியை தொடர்பு கொண்டேன் என்றால் அவ்வாறுதான் இருக்கும். பெங்கலூரில் இருக்கும்போது 9677336192 மற்றும் 7904798108 எண்கள் மூலமாகத்தாக அதிக முறை எதிரியை தொடர்பு கொண்டேன் என்றால் சரிதான்.

3) எங்கு தங்கி படித்தேன் என்றால் குறைவான தொகையில் உள்ள PG யில் தங்குவேன். குறிப்பாக எந்த விலாசத்தில் இருந்து படித்தேன் என்றால் 2 அல்லது 3 மாதத்தில் இடம் மாறுவதால் குறிப்பான விசாலம் இல்லை. நான் படித்த காலத்தில் கல்யாண குமாரின் எண்ணை எதிரிக்கு கொடுத்து எதிரி அந்த எண்ணிற்கு தொகை அனுப்ப கூறியுள்ளேன் என்றால் இல்லை. 7904798108 எண்ணின் மூலமாக நான் எதிரிக்கு கல்யாணகுமார் தனது கணவர் என்று கூறி அவரது எண்ணை எதிரிக்கு அனுப்பினேன் என்றால் எண் மட்டும் அனுப்பியுள்ளேன், கணவர் என்று குறிப்பிடவில்லை. அவர் போலீஸ் அதிகாரி என்பதால் எதிரியை அவருக்கு ரூ.2 லட்சம் நான் கொடுக்க சொன்னேன் என்றால் இல்லை. 14.05.2022 ல் நான் காவல் அதிகாரியான கல்யாணகுமார் என்பவருக்கு ரூ.2 லட்சம் கொடுப்பதற்காக எதிரியிடம் இருந்து ரூ.2 லட்சம் பெற்றேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு ரூ.18 லட்சம் மற்றும் ரூ.2 லட்சம் என மொத்தமாக ரூ.20 லட்சம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

4) நான் ரூ.4 லட்சம் மட்டுமே எதிரிக்கு கடனாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, ரூ.12 லட்சம் கொடுத்துள்ளேன். கொடுத்ததாக சொல்லும் கூறப்படும் தொகை வட்டிக்காக கொடுத்தேனா என்றால் இல்லை, நான் பணம் LIC ல் கடன் மற்றும் எனது நகைகளை அடமானம் வைத்து கொடுத்தற்காக மட்டும் வட்டியாக ரூ.11,000/- கொடுக்கப்பட்டது. LIC ல் எவ்வளவு கடன் பெற்று கொடுத்தேன் என்றால் எனது ஆவணங்களை பார்த்தால் தெரியும். நகைகளை அடமானம் எவ்வளவு தொகைக்கு வைத்தேன் என்றால் நினைவில்லை, ஆவணங்களை பார்த்தால் தெரியும். கடன் பெற்ற விபரத்தை புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் நினைவில்லை, மற்றொரு வழக்கில் கூறியுள்ளேன். ரூ.12 லட்சம் பரிவர்த்தனைக்காக எழுத்துபூர்வமாக ஒப்பந்தம் அல்லது ஆவணம் உள்ளதா என்றால் இல்லை, காசோலை கொடுத்ததால் பணம் கொடுத்தேன். பிராமிசரி நோட் இல்லை என்றால் சரிதான். காசோலைகள்(3) கொடுத்திருந்தார். காசோலையை தவிர பணம் பெற்றதற்கு வேறு ஏதேனும் ஆவணம் உள்ளது என்றால் எதிரியின் தந்தையின் தானபத்திரத்தின் ஆவண நகல் பெற்றிருந்தேன். 2021 முதல் 2022 வரை ரூ.12 லட்சம் பல தவணைகளில் கொடுத்ததாக புகாரில் கூறியிருக்கும்பட்சத்தில் எந்ததெந்த தேதிகளில் எவ்வளவு

தொகை கொடுக்கப்பட்டது என்று குறிப்பாக கூறி உன்ளேனா என்றால் தற்போதைய வழக்கில் கூறிவில்லை. மற்றொரு வழக்ககான சி.சி.53/2023–ல் கூறியுள்ளேன். சி.சி.53/2023–ன் சான்றிட்ட நகல் தற்போது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சி.சி.53/2023 ல் தவணைகளில் தொகை குறிப்பாக கூறவில்லை என்றால் சரியல்ல.

5) தவணைகளில் தொகையை குறிப்பாக ம.சா.ஆ.3 ஆவணம் அறிவிப்பில் கூறவில்லை என்றால் சரிதான். எதிரி ரூ.11,000/– வட்டிக்காக கொடுத்த தொகையை தற்போதைய வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் காரைக்குடியில் இருக்கும்போது ரூ.12 லட்சம் கொடுத்தேனா அல்லது பெங்கலூரில் இருக்கும்போது கொடுத்தேனா என்றால் அதிகபட்சமாக காரைக்குடி மற்றும் தமிழ்நாட்டில் இருக்கும்போது கொடுத்தேன். எதிரி பெங்களூரில் வசிப்பவர் என்பதால் ஒன்று அல்லது இரண்டு முறை மட்டும் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளேன் என்றாலும் ஆகவே பண பரிவர்த்தணை தமிழ்நாட்டில் நடந்திருக்க வாய்பில்லை என்றால் சரியல்ல, நிறைய முறை வந்துள்ளார். எதிரி அதிகப்படியான தொகை தமிழ்நாட்டில் இருந்துதான் பெற்றுள்ளார் என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் காசோலை கொடுத்துள்ளார். ரூ.12 லட்சத்தில் அதிகபடியான தொகை ரொக்கமாக கொடுத்தேன் என்றால் இல்லை. ரூ.12 லட்சத்தில் அதிகப்படியான தொகை வங்கி மூலமாக கொடுத்தேனா என்றால் குறிப்பாக நினைவில்லை. வங்கி மற்றும்ரொக்கமாக கொடுத்தேன். வங்கி மூலமாக பணம் கொடுத்தற்கு ஆவணம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை, மற்றொரு வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

6) பணபரிவர்த்தனைக்கு காண்பிப்பதற்கு சாட்சிகள் உள்ளதா என்றால் குறிப்பாக இல்லை, ஆவணமாக காசோலை உள்ளது. LIC பெற்ற கடன் மற்றும் நகை கடன் பெற்றதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். மற்றொரு வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். எதிரி ரூ.4 லட்சம் மட்டும் கடனாக பெற்றிருந்தார் என்றாலும், ரூ.20 லட்சம் எனக்கு கொடுத்துள்ளதை திருப்பி கேட்டபோது நான் எனது காவல் அதிகாரியாக பணிபுரியும் கணவரை வைத்து எதிரியை

மிரட்டினார் என்றால் சரியல்ல, அவர் எனது கணவர் இல்லை. எதிரிதான் எனக்கு பணம் திருப்பி தரவேண்டும். Facebook. Instagram மூலமாக நான் எதிரியை மிரட்டி அவரது பெயரை கலங்கம் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு பணம் கொடுக்க கூடாது என்பதற்காக வாட்ஸ்அப் குரூப் 7904798108 வைத்து தொடங்கி அதன் மூலமாக எதிரியின் பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல, அனைவரும் எங்கள் கல்லூரில் படித்த நபர்கள் என்பதால் பணப்பிரச்சனையை அவர்களிடம் பகிர்ந்தேன். எதிரி கொடுத்த காசோலையின் புகைப்படத்தை குரூப்பில் அனுப்பி எதிரி பணம் தருவதில் ஏமாற்றிவிட்டேன் என்று வாட்ஸ்அப் குரூப்பில் கூறினேன் என்றால் சரிதான். பணம் கேட்டு Sexual Harrasment case எதிரி மீது போடுவேன் என்று எதிரியை மிரட்டினேன் என்றால் இல்லை. நானும் காவலரும் சேர்ந்து எதிரியிடம் இருந்து பணத்தை பரிப்பதற்காக செக்யூரிட்டிக்கா கொடுத்து வைத்திருந்த காசோலை தவறாக பயன்படுத்தி எதிரி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(Party inperson after cross examinaing the witness exhaustively for almost 2 hours and now stating that he have not started the material cross examination)

<u>**குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**</u>

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.05.11 17:15:28 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.